T. 962.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சிகன் ஐந்திணை
# சிறுதிகண்டு.

—*—

இஃது
மொழிநூல் முதலிய பலநூல்களின்
ஆசிரியராகிய மகாவித்வான்
ஸ்ரீலஸ்ரீ
**மாகறல்-கார்த்திகேய முதலியாரவர்கள்**
பழம் தமிழ்ப் புத்தகசாலையினின்றும் எடுத்து
மாகறல் - தி. பொன்னுசாமி முதலியாரவர்களால்

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்
வைதிக சைவ அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1918

இதன் விலை அணா 2.

[காப்பிரைட் ரிஜிஸ்டர்ட்.]

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீலஸ்ரீ மகாவித்வான்

மாகறல் - கார்த்திகேய முதலியாரவர்கள்

இயற்றிய நூல்கள்.

---[*]---

## மொழிநூல்.

இது ஆங்கிலத்தில் Philology என்னப்படுவது: தமிழில் இதுகாறும் எவரானும் இயற்றப்படாத அரியபெரிய புதுநூல். தமிழின் கண்ணுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் தெளிவாய் உற்பத்தி முதலியன எடுத்துக் கூறுவது. தமிழேயன்றி மற்றைப்பாஷைகளிலுமுள்ள சொற்களின் உற்பத்தி முதலியவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் சாதனமாயுள்ளது. பல சான்றோர்களாலும் பத்திரிகைகளாலும் புகழப்பட்டது. உயர்ந்த நல்ல பளபளப்பான கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் அவசியமாக இருக்கவேண்டியது. இதன் விலை காலிகோகட்டடம் ரூ. 2. சாதாரண பயிண்டு ரூ. 1-8.

---

## கச்சி இதழகல் அந்தாதி.

இவ்வரிய நிரோட்டக யமகவந்தாதியானது ஸ்ரீ கச்சி ஏகம்பநாதர்மீது பாடப்பட்டது. இதற்குப்

பதவுரை பொழிப்புரை கருத்துரை குறிப்புரை ஆதிய நன்கு எழுதப்பட்டிருக்கின்றன. கல்வியிற் றேர்ச்சி பெற விரும்புவோ ரெவரும் அவசியம் படிக்கவேண்டியது. விலை அணா 2.

---

## தமிழ் விண்ணப்பம்.

இதில் தமிழ் வரலாறு, தமிழ்ப் பெருமை, தமிழ்ச் சொற்காரணம் தமிழ் வளர்ச்சி தமிழ்ப்போதம் ஆகிய இவையாவும் அடங்கியிருக்கின்றன. யாவரும் எளிதே படிக்கத்தக்க வசன நூல். விலை அணா 3.

---

## ஆத்திசூடி முதற்சூத்திர விருத்தியுரை.

ஔவையார் அருளிய ஆத்திசூடியை அறியாதார் நம் நாட்டில் எவருமில்லை. அதனுள் அடங்கியிருக்கும் சூத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாணிக்கமெனத் தகும். அவற்றுள் அறஞ்செய விரும்பு என்னும் முதற்சூத்திரத்திற்கு அதிலுள்ள பல அரியபெரிய நுண்ணிய தத்துவார்த்தங்களையும் இலக்கிய விலக்கண விசேடங்களையும் நன்குமிகவிளக்கி விருத்தியுரை எழுதப்பட்டிருக்கிறது. நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 4.

## மஞ்சிகன் ஐந்திணைச் சிறு நிகண்டு.

இது இதுகாறும் வெளிவராத மிகப்பழைய நிகண்டு. இதனுள் தற்காலம் வெளிவந்துள்ள பல நிகண்டுகள் அகராதிகளில் காணக்கூடாத பலசொற்கள் இருக்கின்றமையின் இந்நூல் தமிழ்கற்றவர் கற்கின்றவர் கற்பவராகிய ஒவ்வொருவருடைய கையிலும் இருக்கவேண்டியது அவசியமாம். விலை அணா 2.

இவை வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதுக. [தபாற்கூலி முதலியன வேறு.]

விலாசம்

தி. பொன்னுசாமி முதலியார்,
பழந்தமிழ்ப் புத்தகசாலை,
கெண்டி, சைதாப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

---

சென்னை, பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப் போதகாசிரியர் ஸ்ரீமான் - தி. செல்வக்கேசவராய முதலியார் எம் - ஏ - அவர்கள் மொழிநூலைப்பற்றிய அபிப்பிராயம்.

மொழிநூலை ஒருவாறு ஆராய்ந்து பார்த்தேன். தமிழின் முதுமையையும் தமிழரின் முதுமையையும் சுட்டிய இத்துணைச் சான்றுகளை இதுகாறும் யான் எங்கும் ஒருசேரக்கண்டிலேன். இது இந்நூலாசிரியருடைய ஆராய்ச்சியின் அகலத்தை விளக்குகின்றது. கடைச்சங்க முதல் இந்நாள்வரையில் உள்ள தமிழ்ப்புலவருள் தமிழில் பற்றுள்ளமுடையார்களில் இவர் எவர்க்கும் இளைத்துக் காட்ட

வில்லை. தமிழைச்சுட்டி இவர் வற்புறுத்து மவைகளைத் தமிழ்ப்பெரியோர் சிலர் இயன்றமட்டில் நிறைவேற்றி வருவாராயின் தமிழும் தமிழ் மக்களும் தொல்லைச் சிறப்பை அடைதலாகும் என்பது கூறுமலே அமையும்.

தனித்தமிழை மூதாதையாகவும் ஏனைப் பல மொழிகளை அதன் பிள்ளைகளும் பெயரன்மார்களாகவும் பொருந்தவுரைப்பது இந்நூலின் உட்கோள். பிள்ளைகளும் பெயரன்மார்களும் ஒப்புக்கொள்ளுதலான உண்மைகள் புலப்படின் புதுவதான இக்கொள்கையால் சிலகாலமாக வழங்கி வரும் யுரோபிய மொழிநூலின் போக்கு முற்றும் வேறாக மாறிவிடும்.

முயற்சியின் நோக்கம் தவறுதலாயினும், இவ்வரிய ஆராய்ச்சியில் ஏனை உண்மைகள் பற்பல புலப்படுதல் கூடும். ஏனைமொழி ஏதொன்றும் கற்காத தமிழ்ப்புலவர்கள் மொழிநூல் இன்னதென்பதை ஒருவாறு உணர்வதற்கு இந்நூல் ஒருவாயிலாகும். தமிழில் வேறு சிலர் வேறு நூல்கள் இயற்றுதற்கும் இம்மொழிநூல் ஒருவாயிலாகும். கல்லூரிகளும் சங்கங்களும் தமிழ்ப்புலவரும் இம்மொழிநூலின் பிரதி ஒவ்வொன்று தேடிக்கொள்ளுதல் வேண்டும். விரையாது ஆராய்ந்துபார்த்தால், இதுவரையில் புலப்படாத பலநுட்பங்கள் சிலருக்குப் புலப்படுதல் கூடும். இவ்வாசிரியருடைய ஏனை நூல்களும் உடனுக்குடனே வெளிவருமென்று எதிர்பார்க்கிறேன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முன்னுரை.

## காப்பு.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

தமிழுலகத்திலே, சங்கமிருந்து தமிழாராய்ந்த பண்டைக்காலத்திலே, நல்லிசை நிறுத்திய தொல்லிசைப்புலவராலே இயற்றப்பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்களிலே, பிற்காலத்து எழுதுவாரும் படிப்பாருமின்றி இறந்தொழிந்தன பல; நீருக்கிரையாயின பல; நெருப்பிற் கிரையாயினபல; செல்லிற் கிரையாயின பல; எஞ்சிநின்றவற்றுட் சில காலஞ்சென்ற திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீமான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களாலும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களாலும், மகாவித்துவான் ஸ்ரீமான் தாமோதரம் பிள்ளையவர்களாலும், தற்காலம் சென்னை துரைத்தனக் கலாசாலையில் தமிழ்ப்போதகாசிரியராக விருக்கும் மகாமகோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ சாமிநாதைய

ரவர்களாலும் வெளிக்கொணரப்பட்டன. அங்ஙனம் வெளிவராத நூல்வரிசையில் இந்நிகண்டும் ஒன்றும். இந்நூல் மஞ்சிகன் என்பவரால் இயற்றப்பட்டது.

இந்நூலில் பெரும்பான்மை மூலிகையின் பெயரும் சிறுபான்மை மரம் செடி கொடிகளின் பெயரும் பிறவற்றின் பெயரும் கூறப்பட்டுள்ளன. இதுகாறும் வெளிவந்துள்ள பல நிகண்டுகள், அகராதிகளில் காணக்கிடையாத ஞாங்கல் (மூங்கில்நெல்) முதலியனபோன்ற அரும்பெரும் பதங்கள் இங்குக் கூறப்பட்டுள்ளன வாதலின் பண்டைச் சங்கநூல்களாதிய கற்பவர்க்கு இதுபெரிதும் துணையாகும் என்பதற்கு எட்டுணையும் ஐயமின்று.

மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டெனவே, மஞ்சிகன் ஐந்திணைப் பெருநிகண்டொன்றுளதெனக் கருத வேண்டியிருக்கின்றது. இன்னும் வெளிவராத, கயாகரநிகண்டு, கொல்லிமலை நிகண்டு, விநாயக நிகண்டு, முதலிய பலநிகண்டுகள் இருப்பதாகக் கேள்வி. அவையும் இருந்து கிடைத்து அச்சிடின் தமிழ்ப்பாஷைக்குப் பேருபகாரமாக விருக்கும். அன்றியும், காஞ்சிமா நகரத்திலே, பிள்ளைப்பாளயத்திலே, பூமியின் கீழ் பழந்தமிழ்ப் புத்தகசாலை யொன்று மறைந்து

போனதாகவும், இராயவேலூரைச்சார்ந்த திருவலம் மலையின்மீது முனிவர்பெருமானொருவர் பழந்தமிழ்ப் புத்தகசாலை யொன்று வைத்திருந்ததாகவும் தக்க சான்றோர் சொல்லக்கேட்டிருக்கின்றனம். இவை எம் மட்டும் உண்மையோ அறியேம்.

இந்நூல், பொறை அன்பு சீலம் முதலிய குணங் கட் குறைவிடமானவரும், தமிழ்ப்பாஷை யாராய்ச்சி யிற் றலைசிறந்து விளங்கியவரும், மொழிநூல் கச்சி இதழகலந்தாதி திருமாகறல்வெண்பா பாகைவெண்பா கறைசைக்கலிப்பா திருமாகறல்சந்நிதிமுறை வேளிர்வர லாற்றுமறுப்பு தமிழ்ச்சொல்விளக்கம் மொழிநூற் றிறவுகோல் முதலிய பலநூ லாக்கியோரும், புலவர் சிகாமணியும், எமது ஆசிரியருமாகிய காலஞ்சென்ற சிவஸ்ரீ மாகறல் - கார்த்திகேய முதலியாரவர்களிட மிருந்து எம்கைக்குக்கிடைத்தது. இதனையாவர்க்கும் உபயோகமாகும்பொருட்டு வெளியிடலானேம்.

இங்ஙனம்

மாகறல் - தி. பொன்னுசாமி முதலியார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டு.

—*—

## மூலிகையின் பெயர்.

ஓடதி ஓடதம் மூலிகையாகும். க

## பிரம்பின் பெயர்.

சரலும் மூரலும் பிரம்பெனப்படுமே. உ

## சிறுகீரையின் பெயர்.

சாகஞ் சாகினி சிறுகீரையாகும். ௩

## சிறுமுன்னையின் பெயர்.

சிறுமாலி சிறுமுன்னை. ௪

## பெருமுன்னையின் பெயர்.

பெருமாலி பெருமுன்னை. ௫

## கருநாகதாளியின் பெயர்.

காரிநல்லி கருநாகதாளி. ௬

## தென்னையின் பெயர்.

நாலி நாரி தெங்கு தென்னை. ௭

# மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டு.

### பனையின் பெயர்.

பெண்ணை தாலம் பெணை பனையாகும். அ

### தொய்யாக்கீரையின் பெயர்.

தொய்யை தொய்யால் தொய்யா வாகும். கூ

### வெண்முருங்கையின் பெயர்.

வெளிறும் வெளாலும் வெண்முருங்கை யாகும். க0

### நறுவிலியின் பெயர்.

சேலுங் கோழையும் நறுவிலி யாகும். கக

### அறுகின் பெயர்.

சாலிகஞ் சரவம் அறுகொடு புல்லாம். கஉ

### மூங்கிலின் பெயர்.

வேணு வெதிரி கீசம் விண்டு
முடங்கல் காண்ட மூங்கி லாகும். கங

### மூங்கில்நெல்லின் பெயர்.

ஞாங்கலுந் தோரையு மூங்கினெல் லாகும். கச

### கோவையின் பெயர்.

விம்பமுந் தொண்டையுங் கோவை யாகும். கரு

### ஆமணக்கின் பெயர்.

ஆமண்டம் மந்தம் ஆமணக் கெனப்படும். கசு

### சித்திரமூலத்தின் பெயர்.

சித்திரம் பிங்கலஞ் சித்திர மூலம். கஎ

பூனைக்காஞ்சொறியின் பெயர்.

கண்டூதி தொட்டி பூனைக் காஞ்சொறி. ௧௮

பூனைக்காலியின் பெயர்.

பூசை பில்லி பூனைக் காலி. ௧௯

தகரையின் பெயர்.

பிங்கணம் பிஞ்சம் அரத்தம் தகரை. ௨௦

ஈஞ்சின் பெயர்.

கச்சூரம் ஈந்து ஈஞ்செனப் படுமே. ௨௧

பீநாறியின் பெயர்.

நாறி முட்டை பீநாறி யாகும். ௨௨

புனநெல்லின் பெயர்.

ஐவன மென்பது புனநெல் லாகும். ௨௩

குளநெல்லின் பெயர்.

நீவாரம் வாரம் குளநெல் லெனப்படும். ௨௪

நஞ்சுமுறிச்சான் பெயர்.

நஞ்சு கொல்லி நஞ்சுமு றிச்சான். ௨௫

முடக்கற்றான் பெயர்.

திரிபுடை முடக்கற் றானெனப் படுமே. ௨௬

நீர்மேல் நெருப்பின் பெயர்.

படைகொலி பங்கம் நீர்மே னெருப்பு. ௨௭

நிலவேம்பின் பெயர்.

தித்திலங் காண்டம் நிலவேம் பெனப்படும். ௨௮

ஆலின் பெயர்.

பழுமரந் தொன்மரம் ஆல மாகும். ௨௯

மகிழின் பெயர்.

இலஞ்சி வகுளம் மகிழெனப் படுமே. ௩௰

கொன்றையின் பெயர்.

மதாலங் கடுக்கை யிதளி கொன்றை. ௩௧

குராவின் பெயர்.

கோட்டங் குடிலங் குராவெனப் படுமே. ௩௨

செருந்தியின் பெயர்.

செங்கோ டரத்தஞ் செருந்தி யாகும். ௩௩

சந்தனமரத்தின் பெயர்.

ஆரஞ் சாந்தம் சந்தன மெனப்படும். ௩௪

அரசின் பெயர்.

பிப்பிலங் கணவ மரசெனப் படுமே. ௩௫

கோங்கின் பெயர்.

நாமல் காரம் கோங்க மாகும். ௩௬

பச்சிலையின் பெயர்.

தமாலம் பச்சிலை. ௩௭

பனிதாங்கியின் பெயர்.
பணிலங் குளிரி பனிதாங்கி யாகும். ௩௮

மஞ்சாடியின் பெயர்.
சாடி திலகம் மஞ்சாடி யாகும். ௩௯

ஒதியின் பெயர்.
உதியே ஒதியம். ௪௦

புளியமரத்தின் பெயர்.
எகினஞ் சிந்தம் புளியெனப் படும். ௪௧

ஆவிரையின் பெயர்.
பூவல் புலிகம் ஆவிரை யாகும். ௪௨

மாதளையின் பெயர்.
ஆதளை கழுமுள் மாதளை யாகும். ௪௩

கூவிளத்தின் பெயர்.
மாவிளம் வில்வங் கூவிள மாகும். ௪௪

விண்டுகாந்தியின் பெயர்.
நீலம் விண்டு காந்தி யாகும். ௪௫

சூரியகாந்தியின் பெயர்.
அலத்தஞ் சூரிய காந்தி யாகும். ௪௬

அகத்தியின் பெயர்.
அச்சம் அசகம் அகத்தி யாகும். ௪௭

எலுமிச்சையின் பெயர்.
இலிகுசம் முருக்கு எலுமிச்சை யாகும். ௪௮

வேளையின் பெயர்.
மாதலம் வேளை. ௪௯

குங்குமமரத்தின் பெயர்.
மாலவ மரவம் குங்கும மாகும். ௫௦

சின்னியின் பெயர்.
கோலஞ் சின்னி. ௫௧

அனிச்சமரத்தின் பெயர்.
அனிச்சம் நாகம். ௫௨

தான்றியின் பெயர்.
பூதவந் தான்றி. ௫௩

கொய்யாவின் பெயர்.
குயவு கொய்யா. ௫௪

பல்லிப்பூண்டின் பெயர்.
பாழி பல்லி. ௫௫

தணக்கின் பெயர்.
தணவந் தணக்கு. ௫௬

குதம்பையின் பெயர்.
ஆடகம் போணி குதம்பை யாகும். ௫௭

வேடுவின் பெயர்.
ஆலிகம் வேடு. ௫௮

பிரமியின் பெயர்.
காரா பிரமி. ௫௯

பொடுதலையின் பெயர்.
போடம் பொடுதலை. ௬௰

ஆத்தியின் பெயர்.
தாதகி யாத்தி. ௬௧

வசம்பின் பெயர்.
வசா வசம்பு. ௬௨

உம்பிலங்கொடியின் பெயர்.
ஆம்பிலம் உம்பிலம். ௬௩

எருக்கின் பெயர்.
அருக்க நாமம் எருக்க மாகும். ௬௪

குதிரைக்குளம்பின் பெயர்.
குரமே குதிரைக் குளம்பெனப் படுமே. ௬௫

உடப்பையின் பெயர்.
ஒடுவே யுடுப்பை. ௬௬

ஈயுணியின் பெயர்.
ஈயல் ஈயுணி. ௬௭

வெள்ளறுகின் பெயர்.
பிசித மந்தம் வெள்ள றுகாகும். ௬௮

குருவிச்செடியின் பெயர்.
அரவை குருவி. ௬௯

தேற்றுமரத்தின் பெயர்.
சில்லம் இல்லம் தேறெனப் படுமே. ௭0

படலைக்கள்ளியின் பெயர்.
வச்சிரம் படலைக் கள்ளி யாகும். ௭க

கஞ்சாச்செடியின் பெயர்.
குல்லை யென்பது கஞ்சா வாகும். ௭௨

கத்தரியின் பெயர்.
வங்கங் கத்தரி. ௭௩

கோற்கொடியின் பெயர்.
தாலங் கோற்கொடி. ௭௪

காக்கணத்தின் பெயர்.
கிகிணி காக்கணம். ௭௫

தும்பையின் பெயர்.
செப்பிலை தும்பை. ௭௬

வள்ளையின் பெயர்.
நாலிகம் வள்ளை. ௭௭

காணங்கீரையின் பெயர்.
கண்டு காணங்கீரை யாகும். ௭௮

கடலையின் பெயர்.
சணகங்கடலை. ௭௯

பசலையின் பெயர்.
பாயல் பாய்விரி பசலை யெனப்படும். ௮0

புல்லுருவியின் பெயர்.
சிக்கமுஞ் சிகையும் புல்லுருவி யாகும் ௮௧

இரும்பிலியின் பெயர்.
காழே யிரும்பிலி. ௮௨

தும்பிலியின் பெயர்.
செம்மல் தும்பிலி. ௮௩

கஞ்சாங்கோரையின் பெயர்.
கஞ்சலங் கஞ்சாங் கோரை யெனப்படும். ௮௪

சிறுபுள்ளடையின் பெயர்.
சில்லி யென்பது சிறுபுள் ளடையாம். ௮௫

அச்சங்கரணையின் பெயர்.
காண்டம் அச்சங் கரணை யாகும். ௮௬

கொறுக்கையின் பெயர்.
வேளம் நாளங் கொறுக்கை யாகும். ௮௭

நன்னாரியின் பெயர்.
நறவம் நாரி நன்னாரி யாகும். ௮௮

கடம்பின் பெயர்.
நிபமும் நீபமும் கடம்பெனப் படுமே. ௮௯

ஊசிப்பாலையின் பெயர்.
நத்தமென்பது ஊசிப் பாலை. ௯௦

பெருங்கிழங்கின் பெயர்.
கச்சோலம் பெருங் கிழங்கு மாகும். ௯௧

பூசினியின் பெயர்.
படரி பூசினி. கூ௨

சவண்டலின் பெயர்.
சண்டில் ஓங்கல் சவண்டலெனப்படும். கூ௩

நாயிறுதிரும்பியின் பெயர்.
சூரல் சூரி நாயிறுதிரும்பி. கூ௪

நெடுங்கோரையின் பெயர்.
நெச்சிலும் நெடிலும் நெடுங்கோரை யாகும். கூ௫

கரும்பிரண்டையின் பெயர்.
காகோலங்கூமம் கரும்பிரண்டையாகும். கூ௬

திரிதளமூலியின் பெயர்.
தெங்கமென்பது திரிதளமூலி. கூ௭

நமையின் பெயர்.
நவையும் நவலும் நமையெனப்படுமே. கூ௮

பொன்னாங்கண்ணியின் பெயர்.
திமிசம் இமலம் பொன்னாங் கண்ணி. கூகூ

பிடாவின் பெயர்.
பிசாவும் பிசவும் பிடாவெனப்படும். க00

பீர்க்கின் பெயர்.
பீரம் பீர்க்கு. க0க

செம்புளியின் பெயர்.
சிஞ்சம் செம்புளி. க0௨

அரிசியின் பெயர்.
இயவை தண்டுலம் அரிசி யாகும். ௧௦௩

பாற்சொற்றியின் பெயர்.
மாது பாற்சொற்றி. ௧௦௪

அவுரியின் பெயர்.
நீலி யவுரி. ௧௦௫

சிறுநெல்லியின் பெயர்.
உசிரி சிறுநெல்லி. ௧௦௬

செந்தூதளையின் பெயர்.
தூம்பு செந் தூதளை. ௧௦௭

வெண்டூதளையின் பெயர்.
வாலி வெண் டூதளை. ௧௦௮

கரிசலங்கண்ணியின் பெயர்.
கடுவு கரிசலங் கண்ணி யெனப்படும். ௧௦௯

நொச்சியின் பெயர்.
நீலி நொச்சி. ௧௧௦

மயிர்மாணிக்கத்தின் பெயர்.
வாலிக மென்பது மயிர்மா ணிக்கம். ௧௧௧

அவரையின் பெயர்.
கோழி கவரி யவரை யெனப்படும். ௧௧௨

நெருஞ்சிலின் பெயர்.
காண்டம் நெருஞ்சில். ௧௧௩

மயிர்ச்சிகையின் பெயர்.
மயிலோ சிலியே மயிர்ச்சிகை யெனப்படும். ககச

நாரத்தையின் பெயர்.
நரந்தம் நாரத்தை. ககரு

பெருமரத்தின் பெயர்.
ஓதம் பெருமரம். ககசா

வாகையின் பெயர்.
நெல்லே வாகை. சகஎ

மஞ்சம்புல்லின் பெயர்.
சாதி மஞ்சம் புல்லெனச் சாற்றுவர். ககஅ

துளசியின் பெயர்.
துளவு குல்லை துளசி யாகும். ககக

குறிஞ்சியின் பெயர்.
குரவகம் குறிஞ்சி. கஉ0

தாழையின் பெயர்
கேதகை கைதை தாழை யெனப்படும். கஉக

கருங்குன்றின் பெயர்
காடிக மென்பது கருங்குன்றி யாகும். கஉஉ

மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டு.

முற்றிற்று.